

விழுப்புரம் – திருச்சி புறவழிச் சாலை, வழுதரெட்டி பகுதியில், புதிதாக அமைக்கப்பட்டு வரும் 21 சமூக நீதி போராளிகள் மற்றும் முன்னாள் அமைச்சர் ஏ.கோவிந்தசாமி மணிமண்டபம் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருவதை உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர். க.பொன்முடி பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.சி.பழனி, சட்டமன்ற உறுப்பினர்கள் விழுப்புரம் டாக்டர்.இரா.இலட்சுமணன், விக்கிரவாண்டி அன்னியூர் சிவா, மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்டப் பொருளாளர் இரா.ஜனகராஜ், துணைச் செயலாளர் தயா.இளந்திரையன், ஒன்றியச் செயலாளர் க.மும்மூர்த்தி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் செ.தினகரன், தகவல் தொழில்நுட்ப அணி ப.அன்பரசு உள்ளிட்ட கழக நிர்வாகிகள், அரசு அதிகாரிகள் பலர் உடனிருந்தனர்.

நாளொன்றுக்கு ஒரு இலட்சத்துக்கும் அதிகமானோரின் பசியாற்றும் நடவடிக்கை!

# ‘அம்மா’ உணவகங்களைப் புனரமைக்க ரூ.21 கோடி ஒதுக்கீடு !

## தேனாம்பேட்டை அம்மா உணவக ஆய்வுக்குப்பின் முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

**சென்னை, ஜூலை 21-**

**அம்மா உணவகங்கள் மூலம் நாளொன்றுக்கு ஒரு இலட்சத்துக்கும் அதிகமானோரின் பசியாற்றும் நடவடிக்கைகளை நமது அரசு மேற்கொள்கின்றது என்றும், சென்னையில் உள்ள அம்மா உணவகங்களுக்கு 7 கோடி ரூபாய் மதிப்பில் புதியதாகப் பாத்திரங்கள் மற்றும் சமையல் கருவிகள் வாங்கவும் அம்மா உணவகங்களைப் புனரமைத்திட 14 கோடி ரூபாய் ஒதுக்கவும் உத்தரவிட்டுள்ளேன் என்று தேனாம்பேட்டை அம்மா உணவக ஆய்வுக்குப்பின் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிந்துள்ள தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.**

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:

நாம் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் அம்மா உணவகங்களை மூடிவிடுவோம் எனப் புரளிகளைக் கிளப்பியது ஒரு கூட்டம். அவர்களது தீய எண்ணங்களுக்கு இடமளிக்காமல், கடந்த மூன்றாண்டுகளில் 450 கோடி ரூபாய்க்கும் மேல் செலவிட்டு, நாளொன்றுக்கு ஒரு இலட்சத்துக்கும் அதிகமானோரின் பசியாற்றும் நடவடிக்கைகளை நமது அரசு மேற்கொண்டிருக்கிறது.

இன்று தேனாம்பேட்டை பகுதியில் உள்ள அம்மா உணவகம் ஒன்றில் திடீர் ஆய்வு மேற்கொண்டு, மக்களிடம் உணவின் தரம் குறித்தும்; அங்குள்ள பணியாளர்களிடம் அவர்களின் தேவைகள் குறித்தும் கேட்டறிந்தேன்.

அதையொட்டி, சென்னையில் உள்ள அம்மா உணவகங்களுக்கு 7 கோடி ரூபாய் மதிப்பில் புதிதாகப் பாத்திரங்கள் மற்றும் சமையல் கருவிகள் வாங்கவும் - அம்மா உணவகங்களைப் புனரமைத்திட 14 கோடி ரூபாய் ஒதுக்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

‘நான் முதல்வன்’ போட்டித் தேர்வுப் பிரிவு

# யு.பி.எஸ்.சி. முதன்மைத் தேர்வுக்கான ஊக்கத்தொகைத் திட்டம்!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

*சென்னை, ஜூலை 21-*

*தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக்கழகம் நான் முதல்வன் போட்டித் தேர்வுப் பிரிவு சார்பில் தமிழ்நாடு அரசின் யு.பி.எஸ்.சி. முதன்மைத் தேர்வுக்கான ஊக்கத்தொகை திட்டம் (2024) குறித்த அறிவிப்பினை தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.*

*இதுகுறித்து தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு வருமாறு:-*

*நான் முதல்வன் திட்டத்தின் கீழ் போட்டித் தேர்வுப் பிரிவானது இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை மற்றும், சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களால் 07.03.2023 அன்று துவங்கி வைக்கப்பட்டது.*

*அப்பிரிவானது தமிழ்நாட்டு இளைஞர்கள் ஒன்றிய அரசு வேலைவாய்ப்புக்கான போட்டித் தேர்வுகளை எளிதாக அணுகும் வண்ணம் பல பயிற்சித் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.*

*இந்நிலையில் 2023-24-க்கான தமிழ்நாடு அரசின் பட்ஜெட் உரையில், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் (TNSDC), அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரியுடன் இணைந்து, ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் குடிமைப் பணிகள் தேர்வுகளுக்காக பயின்று வரும் ஆர்வமுள்ள மாணவர்களுக்கு சிறந்த பயிற்சி மற்றும் இதர தேவையான வசதிகளைச் செய்து உதவும் வகையில் ஒரு திட்டத்தை செயல்படுத்தும் என்று அறிவிக்கப்பட்டது.*

*இந்தத் திட்டத்தின் கீழ், ஒவ்வொரு ஆண்டும் 1,000 சிவில் சர்வீசஸ் பயின்று வரும் மாணவர்கள், மதிப்பீட்டுத் தேர்வு மூலம் தேர்வு செய்யப்படுவார்கள். முதல் நிலைத் தேர்வுக்குத் தயாராவதற்கு ஒவ்வொரு மாணவருக்கும் 10 மாதங்களுக்கு மாதம் ரூ.7,500 வழங்கப்படும். முதல்நிலைத் தேர்வில் தேர்ச்சி பெறுவோருக்கு 25,000 ரூபாய் ஊக்கத்தொகையாக வழங்கப்படும்.*

*இத்திட்டம் 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் கடந்த ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. 2024-2025-ஆம் ஆண்டிற்கான பட்ஜெட் உரையில், பத்தி எண்.78 இல், இந்தத் திட்டத்தின் தொடர்ச்சி குறிப்பிடப்பட்டுள்ளது.*

*இதனைத் தொடர்ந்து, 2024-ஆம் ஆண்டின் யு.பி.எஸ்.சி. முதல்நிலை தேர்வில் (16.06.2024) அன்று தேர்ச்சி பெற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்களுக்கு முதன்மைத் தேர்வுக்குப்பயிற்சி மேற்கொள்ள ஏதுவாக தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் கீழ் இயங்கிவரும் நான் முதல்வன் போட்டித் தேர்வுகள் பிரிவின் வாயிலாக 25,000 ரூபாய் நேரடியாக மாணவர்களின் வங்கிக் கணக்கில் செலுத்தப்படும்.*

*இந்த ஊக்கத்தொகையைப் பெறுவதற்கு நடப்பு ஆண்டில் (2024) யு.பி.எஸ்.சி. முதல்நிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்கள், https://portal.naanmudhalvan.tn.gov.in/upsc_ registration என்ற இணையதளத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் அறிவிக்கையைப் படித்து பார்த்து, 19.07.2024 முதல் 28.07.2024 வரை விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.*

*இவ்வாறு அச்செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.*



கடலூர் துறைமுகம் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் கல்வி வளர்ச்சி நாள் விழா நேற்று முன்தினம் நடந்தது. இதில் கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.அய்யப்பன் தலைமை தாங்கி, சொந்த செலவில் ரூ. 2 லட்சம் மதிப்பில் குடிநீர் விநியோகத்திற்கு மின் மோட்டார், மாணவியருக்கு கல்வி உதவித் தொகை வழங்கினார். போட்டிகளில் வென்ற மாணவியருக்கு பரிசு வழங்கி பேசினார். உதவித் தலைமை ஆசிரியர் அறிவழகன், மூத்த ஆசிரியர் பாலமுருகன் முன்னிலை வகித்தனர். உடன் ஆசிரியர் சுகிர்தரமணி தொகுத்து வழங்கினார். விழாவில் கூட்டுறவு சங்கத் தலைவர் ஆதிபெருமாள், அரசு ஒப்பந்ததாரர் ராஜசேகர், ஆசிரியைகள் ஆகியோர் பங்கேற்றனர்.


